சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

மு.வ.எண்.71/2005

2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4ம் நாள் DW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் திருமதி. சாந்தி<br>த/பெ. துரைராஜ் | நாள் 04.08.2026 |
| வயது. | வட்டம் |
| கிராமம். | மாவட்டம். |

**15 ம் பிரதிவாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 15ம்பிரதிவாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்**

1. நான் வழக்கில் 15ம் பிரதிவாதி. நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். 14.03.2024 தேதியில் ராஜேஸ்வரி மற்றும் பாரதி ஆகியோர் எனக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் இணைய வழி நகல் **பி.த.சா.ஆ.1.** 06.07.2000 தேதியில் 1ம் பிரதிவாதி ராஜேஸ்வரி மற்றும் பாரதிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் இணையவழி நகல் **பி.த.சா.ஆ.2**. சாமிக்கண்ணு , ராஜேஸ்வரி மற்றும் பாரதி மற்றும் என் பெயரில் உள்ள கணினி பட்டாக்கள் **பி.த.சா.ஆ.3 முதல் பி.த.சா.ஆ.5**. 01.01.1975 முதல் 07.06.2026 காலங்களுக்கான வில்லங்கச் சான்றிதழ் **பி.த.சா.ஆ.6.** வழக்கு சொத்திற்கான புகைப்படங்களுக்கான பென்டிரைவ் **பி.த.சா.ஆ.7.**

**குறுக்கு விசாரணை**

( 6ம் பிரதிவாதி மற்றும் வாதி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)